**முதன்மை உதவி அமா்வு நீதிமன்றம், விழுப்புரம்.**

**முன்னிலை : – திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதன்மை உதவி அமா்வு நீதிபதி, விழுப்புரம்**

**2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் வியாழக்கிழமை**

**அமா்வு வழக்கு எண்.58/2017**

**(CNR NO: TNVP02-002570-2024)**

(உளுந்தூா்பேட்டை, நீதித்துறை நடுவா் நீதிமன்றம் எண்.2, செல்வி.பெ.ரோஸ்லின் எம்.எஸ்.சி., எம்.எல்., அவா்களால் முதல்நிலை பதிவேடு வழக்கு எண்.16/2012ன் படி 04.02.2017 தேதியில் மேல்விசாரணைக்காக அனுப்பி வைக்க்பபட்டது).

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசுக்காக | - | காவல் ஆய்வாளா்<br>திருவெண்ணெய்நல்லூா் காவல் நிலைய<br>குற்ற எண்.136/2011 |
| 2. | ககுற்றம் சாட்டப்பட்டவா்கள் பெயா் வயது, தந்தை பெயாி மற்றும் முகவாி | : | **எ1. தட்சிணாமூர்த்தி (வயது 27)**<br>த/பெ. வடிவேல்<br>**(1வது எதிரி இறந்துவிட்டார் இவா் மீதான வழக்கு அற்றுபோய்விட்டது)**<br><br>**எ2. சத்தியராஜ் (வயது 28)**<br>த/பெ. வீரன்<br><br>**எ5. தயாளன் (வயது 23)**<br>**த/பெ. கண்ணா (எ) கண்ணன்**<br><br>**எ6. பார்த்திபன் (வயது 42)**<br>த/பெ. மணி<br><br>**எ7. மணி (வயது 42)**<br>த/பெ. சக்திவேல்<br><br>**எ8. சூரியன் (வயது 42)**<br>த/பெ. ஆறுமுகம் |

| | | | |
|---|---|---|---|
| | | | **(3, 4 எதிரிகள் மீது பி.ஆர்.சி. எண்.2/2017 ஆக பிரிக்கப்பட்டுள்ளது)** |
| 3. | சம்பவ நாள் | : | 10.03.2011 |
| 4. | புகார் நாள் | : | 11.11.2011 |
| 5. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1வது எதிரி - 12.03.2011<br>2வது எதிரி - 12.03.2011<br>5வது எதிரி - 12.03.2011<br>6வது எதிரி - 12.03.2011<br>7வது எதிரி - 12.03.2011<br>8வது எதிரி - 12.03.2011 |
| 6. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | 1வது எதிரி - 17.02.2017<br>2வது எதிரி - 17.02.2017<br>5வது எதிரி - 17.02.2017<br>6வது எதிரி - 17.02.2017<br>7வது எதிரி - 17.02.2017<br>8வது எதிரி - 17.02.2017 |
| 7. | எதிரிகள் மீது காவல்நிலையத்தார் குற்றச்சாட்டுக்கள் | : | 1, 2, 5 முதல் 8 எதிரிகள் இதச 147, 148, 294(பி), 509, 342, 307, 323, 506(2) பிரிவின் கீழ் |
| 8. | எதிரிகள் மீது நீதிமன்றத்தில் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | : | 1, 2, 5 முதல் 8 எதிரிகள் 147, 148, 452, 294(பி), 509, 506(ii), 307 உ/இ.149 இதச பிரிவுகளின் கீழும், 5வது எதிரி மீது இதச பிரிவு 342ன் கீழும், 6 முதல் 8 எதிரிகள் மீது இதச பிரிவு 323ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| 9. | எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |
| 10 | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 26.06.2025 |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 16.03.2026 |
| 12. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 1, 2, 5 முதல் 8 எதிரிகள் 147, 148, 452, 294(பி), 509, 506(ii), 307 உ/இ.149 இதச பிரிவுகளின் கீழும், 5வது எதிரி மீது இதச பிரிவு |

| | | | |
|---|---|---|---|
| | | | 342ன் கீழும், 6 முதல் 8 எதிரிகள் மீது இதச பிரிவு 323ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் அல்ல. |
| 13. | நீதிமன்றத்தின் தீர்ப்பும், தண்டனையும் | -: | **முடிவாக,** அரசுத்தரப்பு 2, 5 முதல் 8 எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களான இதச பிரிவுகள் 147, 148, 452, 294(பி), 509, 506(ii), 307 உ/இ.149 இதச பிரிவுகளின் கீழும், 5வது எதிரி மீது இதச பிரிவு 342ன் கீழும், 6 முதல் 8 எதிரிகள் மீது இதச பிரிவு 323ன் கீழும், 2, 5 முதல் 8 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 2, 5 முதல் 8 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1வது எதிரி இறந்துவிட்டார் இவர்மீதான வழக்கு அற்றுபோய்விட்டது.<br>இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |
| 14. | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | : | எதிரிகள் விடுதலை செய்யப்பட்டதால் தீர்ப்பின் நகல் வழங்கப்படவில்லை |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |

இவ்வழக்கு 18.03.2026 இன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.கார்த்திகேயன், அவர்களும், 1, 2, 5 முதல் 8 எதிரிகளின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.பஞ்சவர்ணம், மற்றும் திரு.மோகன்ராஜ், ஆகியோர்களும், முன்னிலையாகி ஆற்றிய இருதரப்பு வாதங்களைக்

கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

இவ்வழக்கில் கடந்த 10.03.2011ம் தேதி அன்று காந்திக்குப்பம் காலனியை சேர்ந்தவர்களுக்கும், திருவெண்ணெய்நல்லூரை சேர்ந்த மற்றும் ஊர் பொதுமக்களுக்கும், தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்த காரணமாக அன்று இரவு 9.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் சட்டவிரோதமாக ஒன்றுகூடி கைகளில் தடி, இரும்பு பைப், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களை ஏந்தி கலக கும்பலாக மாறி புகார்தாரர் சாட்சி கணேசன் என்பவர் இட்லிகடையில் அத்துமீறி நுழைந்து கடையில் இருந்த புகார்தாரர் தாயார் சாட்சி மாரி க/பெ.பிரகலாதன் என்பவரை ஏண்டி தேவிடியா வல்லார ஓழி ஊர்க்காரர்களுக்கு சப்போட்டா கடையை வச்சிறிருக்கியா எல்லா கடைக்காரர்களும் எங்களை பார்த்து ஓடிட்டான் உனக்கு கொழுப்பு அதிகாமாடி என்று சொல்லி அசிங்கமாக திட்டியும், அதை தடுத்து கேட்ட புகார்தாரர் சாட்சி கணேசனை எதிரி புஷ்பராஜ் மற்றும் எதிரி தாயாள் ஆகியோர் நகராமல் பிடித்துக்கொள்ள எதிரி தட்சிணாமூர்த்தி கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் அவருக்கு மரணம் ஏற்படுத்தும் கருத்துடன் இத்தோடு செத்து மடிடா என்று சொல்லி தலையில் அடித்து காயப்படுத்தியுள்ளார். 2வது எதிரி சத்தியராஜ் அவரின் முதுகில் இரும்பு பைப்பால் அடித்து காயப்படுத்தியுள்ளார். 3வது எதிரி செந்தில் அவரது வலது தோள்பட்டையில் கையில் வைத்திருந்த தடியால் அடித்து காயப்படுத்தியும் காலால் அவரை வயிற்றில் எட்டி உதைத்து காயப்படுத்தியும் உள்ளார். அதை தடுத்த சாட்சி 2 மாரியை எதிரிகள் மணி, சூரியன், பார்த்திபன் ஆகியோர்கள் கண்டபடி கையாலும், காலாலும் மாறி மாறி அடித்தும், உதைத்தும் காயங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். எதிரிகள் அனைவரும் சாட்சிகள் இருவரையும் இனி எங்கள் பேச்சை கேட்கவில்லை என்றால் உங்களை உயிரோடு விடமாட்டோம் என்று மிரட்டியுள்ளனர். சம்பவத்தை தடுக்க வந்த அய்யனார் மற்றும் சுப்பையா ஆகியோரையும் கொன்றுவிடுவதாக மிரட்டியுள்ளார்கள். எனவே எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பொதுவான நோக்கத்தோடு செயல்பட்டமையால் அனைவரும் இதச பிரிவுகள் 147, 148, 452, 294(பி), 509, 342, 307, 323, 506(2) மற்றும்

உ/இ.149ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார்கள் என திருவெண்ணெய்நல்லூர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) மேற்படி குற்ற அறிக்கையை பெற்றுக்கொண்ட உளுந்தூர்பேட்டை, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, அவர்களால் வழக்கை முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.16/12 ஆக 12.04.2012 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன் நகல்கள் யாவற்றையும் குவிமுச பிரிவு 207 படி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கியுள்ளார். பின்னர் அவர் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 148, 452, 294(பி), 509, 342, 307, 323, 506(2) மற்றும் உ/இ.149ன் கீழான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதாக கருதி இந்த வழக்கை குவிமுச பிரிவு 209(அ) பிரிவின்படி மாண்புமிகு விழுப்புரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்துக்கு வழக்கு கோப்புகளை சமர்ப்பித்துள்ளார். மேற்படி வழக்கை பெற்றுக்கொண்ட மாண்புமிகு விழுப்புரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி அவர்கள், இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து அமர்வு வழக்கு எண்.58/2017 ஆக கோப்பிற்கு எடுத்து மேல்விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

3) வழக்கு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து இருதரப்பு வாதங்களைக் கேட்டு 1, 2, 5 முதல் 8 எதிரிகள் மீது 147, 148, 452, 294(பி), 509, 506(ii), 307 உ/இ.149 இதச பிரிவுகளின் கீழும், 5வது எதிரி மீது இதச பிரிவு 342ன் கீழும், 6 முதல் 8 எதிரிகள் மீது இதச பிரிவு 323ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, எதிரிகளிடம் விளக்கிக்கூறி கேட்க எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள். எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றும், வழக்கை மேல்நடத்தவேண்டும் என்றும் கூறினார்கள்.

4). அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5). அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சான்றுரை வாயிலாக தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் விவரம் பின்வருமாறு...

அ) அ.சா.1 திரு.கணேசன், தனது முதல் விசாரணை சாட்சியத்தில், தான் திருவெண்ணெய்நல்லூர் பாலாஜி நகரில் வசித்து வருவதாகவும், கடந்த 2011ம் வருடம் தனது தாயார் திருவெண்ணெய்நல்லூர் கடை வீதியில் பழைய பஸ் ஸ்டாப்பில் இரவு நேர இட்லிகடை வைத்து நடத்தி வந்தார் என்றும், அவருக்கு துணையாக தான் இருந்து வந்ததாகவும், 10.03.2011 அன்று இரவு சுமார் 9.30 மணிக்கு கூட்டமாக வந்தார்கள் என்றும், அவர்கள் கையில் தடி, இரும்பு பைப்பு வைத்திருந்தார்கள் என்றும், தனது அம்மாவை கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், தான் ஏன் பிரச்சினை செய்கிறீர்கள் என்று கேட்டதாகவும், கூட்டத்தில் இருந்தவர்கள் தன்னை அடித்துவிட்டார்கள் என்றும், தடுக்க வந்த தன் அம்மாவையும் அடித்துவிட்டார்கள் என்றும், உயிரோடு விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்றும், அருகில் இருந்தவர்கள் வந்து தடுத்தார்கள் என்றும், சம்பவ சமயம் இரவு நேரம் என்பதாலும், கூட்டமாக வந்ததாலும், யார் தன்னையும், தன் அம்மாவையும் அடித்தார்கள் என்று அடையாளம் காட்ட இயலாது என்றும், தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளவர்களை தனக்கு தெரியாது என்றும், காயம்பட்ட தானும், தனது அம்மாவும் விழுப்புரம் அரசு மருத்துவ கல்லூா் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றும், போலிசார் தன்னிடம் வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அது அ.த.சா.ஆ.1 என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

ஆ) அ.சா.2. திருமதி.மாரி, தனது முதல் விசாரணையில், கடந்த 2011ம் வருடம் தான் திருவெண்ணெய்நல்லூர் கடை வீதியில் பழைய பஸ் ஸ்டாப்பில் இரவு நேர இட்லிகடை நடத்தி

வந்ததாகவும், தனக்கு உதவியாக தனது மகன் கணேசன் என்பவர் இருந்து வந்தார் என்றும், 10.03.2011 அன்று இரவு சுமார் 9.30 மணிக்கு சிலர் கூட்டமாக வந்தார்கள் என்றும், அவர்கள் கையில் தடி, இரும்பு பைப்பு வைத்திருந்தார்கள் என்றும், தன்னை கெட்ட வார்த்தைகளால் திட்டி தகராறு செய்தார் என்றும், ஏன் பிரச்சினை செய்கிறீர்கள் என்று தனது மகன் கேட்டார் என்றும், கூட்டத்தில் இருந்தவர்கள் தன்னையும், தன் மகனையும் அடித்துவிட்டார்கள் என்றும், தங்களை உயிரோடு விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்றும், அருகில் இருந்தவர்கள் வந்து தடுத்தார்கள் என்றும், சம்பவ சமயம் இரவு நேரம் என்பதாலும், கூட்டமாக வந்ததாலும் யார் தன்னையும், தன் மகனையும் அடித்தார்கள் என்று தனக்கு அடையாளம் காட்ட இயலாது என்றும், தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளவர்களை தனக்கு தெரியாது என்றும், காயம்பட்ட தனது மகனை அரசு விழுப்புரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்கள் என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

இ) அ.சா.3 திரு.முத்தால் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், தான் திருவெண்ணெய்நல்லூரில் வசித்து வருவதாகவும், வழக்கு பற்றி எதுவும் தனக்கு தெரியாது என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

ஈ) அ.சா.4 திரு.ரமேஷ், தனது முதல் விசாரணை சாட்சியத்தில், கடந்த 11.03.2011 அன்று தான் திருவெண்ணெய்நல்லூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது விழுப்புரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பிரிசில் இருந்த திருவெண்ணெய்நல்லூர் பாலாஜி நகர், கீழ் மேட்டுத்தெரு பிரகலாதன் மகன் கணேசன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலம் பதிவு செய்து 6.00 மணிக்கு நிலையம் வந்து திருவெண்ணெய்நல்லூர் காவல்நிலைய குற்ற எண்.136/2011 பிரிவு 147, 148, 294(பி), 341, 324, 323, 506(2), 307 இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உளுந்தூர்பேட்டை

நீதித்துறை நடுவர் எண்.2 முன்பாக அசல் முதல் தகவல் அறிக்கைகை சமர்ப்பித்ததாகவும், அதன் நகலை புலன்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.2 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.தசா.ஆ.3 என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

உ) அ.சா.5 திரு.அன்பழகன், தனது முதல் விசாரணை சாட்சியத்தில், கடந்த 11.03.2011 அன்று உதவி ஆய்வாளர் திரு.ரமேஷ் என்பவர் திருவெண்ணெய்நல்லூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின்படி அவர் மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த திருவெண்ணெய்நல்லூர் பாலாஜி நகர், கீழ் மேட்டுத்தெரு, பிரகலாதன் மகன் கணேசன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலம் பதிவு செய்து 6 மணிக்கு நிலையம் வந்து திருவெண்ணெய்நல்லூர் காவல்நிலைய குற்ற எண்.136/2011 பிரிவு 147, 148, 294(பி), 341, 324, 323, 506(2), 307 இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உளுந்தூர்பேட்டை நீதித்துறை நடுவர் எண்.2 முன்பாக அசல் முதல் தகவல் அறிக்கையை சமர்ப்பித்தும், அதன் நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.மகாதேவன் அவர்கள் 11.03.2011 அன்று காலை 7.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பத்மநாராயணன் மற்றும் முத்தால் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.த.சா.ஆ.4, வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆகியவைகள் தயார் செய்தும், அன்றையதினமே சாட்சிகள் கணேசன், மாரி, அய்யனார், சுப்பையா, பத்மராஜன், முத்தால் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், 12.03.2011 அன்று எதிரிகள் தட்சிணாமூர்த்தி, பார்த்திபன், மாரி, சூரியன் ஆகியோர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியிருந்தார் என்றும், அதன் பின்னிட்டு 20.06.2011 அன்று காயம்பட்ட கணேசன் என்பவருக்கு சிகிச்சை அளித்து காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் திரு.மனோஜ் என்பவரை விசாரித்து அவர் காயம்பட்ட கணேசனுக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என வழங்கிய கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.6 என்றும், அதன்பிறகு வழக்கின்

புலன் விசாரணை முடித்து எதிரிகள் தட்சிணாமூர்த்தி, சத்தியராஜ், செந்தில், புஷ்பராஜ், பார்த்திபன், மணி, சூரியன் ஆகியோர்கள் மீது பிரிவுகள் 147, 148, 452, 294(பி), 509, 342, 307, 323, 506(2) உ/இ.140 இதசவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

6). அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சியங்கள் அனைத்தும் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

7). அ.சா.5ன் சாட்சியத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவிய போது அந்த சாட்சிய விபரங்களை மறுத்து பொய் சாட்சி என்றும் பொய் வழக்கு என்று கூறி குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள். அவர்கள் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறினார்கள்.

8). இருதரப்பு வாய்மொழி சாட்சியம் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகளையும் ஆய்வு செய்ததில் 1, 2, 5 முதல் 8 எதிரிகள் மீது 147, 148, 452, 294(பி), 509, 506(ii), 307 உ/இ.149 இதச பிரிவுகளின் கீழும், 5வது எதிரி மீது இதச பிரிவு 342ன் கீழும், 6 முதல் 8 எதிரிகள் மீது இதச பிரிவு 323ன் கீழும் குற்றச்சாட்டுக்கள்ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பவே தீர்வுக்குரிய பிரச்சினை ஆகும்.

9). <u>தீர்வு காணவேண்டிய பிரச்சினை</u>

அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் கடந்த 10.03.2011ம் தேதி அன்று காந்திக்குப்பம் காலனியை சேர்ந்தவர்களுக்கும், திருவெண்ணெய்நல்லூரை சேர்ந்த மற்றும் ஊர் பொதுமக்களுக்கும், தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்த காரணமாக அன்று இரவு 9.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் சட்டவிரோதமாக ஒன்றுகூடி

கைகளில் தடி, இரும்பு பைப், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களை ஏந்தி கலக கும்பலாக மாறி புகார்தாரர் அ.சா.1ன் இட்லிகடையில் அத்துமீறி நுழைந்து கடையில் இருந்த தாயார் அ.சா.2 மாரி க/பெ.பிரகலாதன் என்பவரை ஏண்டி தேவிடியா வல்லார ஓழி ஊர்க்காரர்களுக்கு சப்போட்டா கடையை வச்சிறிருக்கியா எல்லா கடைக்காரர்களும் எங்களை பார்த்து ஓடிட்டான் உனக்கு கொழுப்பு அதிகாமாடி என்று சொல்லி அசிங்கமாக திட்டியும், அதை தடுத்து கேட்ட அ.சா.1 கணேசனை எதிரி புஷ்பராஜ் மற்றும் எதிரி தாயாளன் ஆகியோர் நகராமல் பிடித்துக்கொள்ள எதிரி தட்சிணாமூர்த்தி கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் அவருக்கு மரணம் ஏற்படுத்தும் கருத்துடன் இத்தோடு செத்து மடிடா என்று சொல்லி தலையில் அடித்து காயப்படுத்தியுள்ளார். 2வது எதிரி சத்தியராஜ் அவரின் முதுகில் இரும்பு பைப்பால் அடித்து காயப்படுத்தியுள்ளார். 3வது எதிரி செந்தில் அவரது வலது தோள்பட்டையில் கையில் வைத்திருந்த தடியால் அடித்து காயப்படுத்தியும் காலால் அவரை வயிற்றில் எட்டி உதைத்து காயப்படுத்தியும் உள்ளார். அதை தடுத்த அ.சா.2 மாரியை எதிரிகள் மணி, சூரியன், பார்த்திபன் ஆகியோர்கள் கண்டபடி கையாலும், காலாலும் மாறி மாறி அடித்தும், உதைத்தும் காயங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். எதிரிகள் அனைவரும் சாட்சிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவரையும் இனி எங்கள் பேச்சை கேட்கவில்லை என்றால் உங்களை உயிரோடு விடமாட்டோம் என்று மிரட்டியுள்ளனர். சம்பவத்தை தடுக்க வந்த அய்யனார் மற்றும் சுப்பையா ஆகியோரையும் கொன்றுவிடுவதாக மிரட்டியுள்ளார்கள். எனவே எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பொதுவான நோக்கத்தோடு செயல்பட்டமையால் அனைவரும் இதச பிரிவுகள் 147, 148, 452, 294(பி), 509, 342, 307, 323, 506(2) மற்றும் உ/இ.149ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார்கள் என வாதிட்டார்.

10). எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அவர்கள் எதிரிகள் மேற்படி செயலை செய்யவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

11) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

12). இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 திரு.கணேசன், அ.சா.2 திருமதி.மாரி, தங்களது சாட்சியங்களில் 10.03.2011 அன்று இரவு சுமார் 9.30 மணிக்கு கூட்டமாக வந்தார்கள் என்றும், அவர்கள் கையில் தடி, இரும்பு பைப்பு வைத்திருந்தார்கள் என்றும், இருவரையும் கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், தாங்கள் ஏன் பிரச்சினை செய்கிறீர்கள் என்று கேட்டபோது கூட்டத்தில் இருந்தவர்கள் தங்களை அடித்துவிட்டார்கள் என்றும், தடுக்க வந்தவர்களைய் அடித்துவிட்டார்கள் என்றும், உயிரோடு விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்றும், அருகில் இருந்தவர்கள் வந்து தடுத்தார்கள் என்றும், சம்பவ சமயம் இரவு நேரம் என்பதாலும், கூட்டமாக வந்ததாலும், யார் தங்களை அடித்தார்கள் என்றும், அடையாளம் காட்ட இயலாது என்றும், தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளவர்களை தங்களுக்கு தெரியாது என்றும் கூறியுள்ளார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.த.சா.ஆ.1 கையெழுத்து மட்டும் தன்னுடையதுதான் என்றும், போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும், அரசுத்தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

13). மேலும் இவ்வழக்கில் சம்பவ சாட்சியான அ.சா.3 திரு.முத்தால் வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசுத்தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். இவரின் சாட்சியம் அரசுத்தரப்பிற்கு உதவுவதாக அமையவில்லை.

14). எனவே அ.சா.1 முதல் அ.சா.3ன் சாட்சியங்கள் முன்னுக்குப்பின் முரணாக இருப்பதால் மேற்படி சாட்சியங்கள் அரசுத்தரப்பிற்கு உதவுவதாக அமையவில்லை.

15). மேலும் அரசுத்தரப்பில் 1 முதல் 3 வரையான சாட்சியங்கள் இந்த வழக்கு சம்பவம் பற்றி தங்களுக்கு தெரியாது என்று எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாகியுள்ளார்கள். மேலும் சம்பவ சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவருமே

முன்னுக்குப்பின் முரணாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சம்பவம் நடந்ததா என்பது பற்றி சந்தேகம் எழுகிறது. எனவே அரசுத்தரப்பு, எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கை நிரூபிக்க முற்றிலும் தவறிவிட்டது என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

16). அ.சா.4 திரு. ரமேஷ், சிறப்பு உதவி ஆய்வாளர் ஆவார். அ.சா.1 கொடுத்த அ.த.சா.ஆ.2 புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 யை புகார் மனுவுடன் இணைத்து உளுந்தூர்பேட்டை நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், வழக்கு கோப்பினை ஆய்வாளரின் பார்வைக்கு வைத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

17). அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில் 10.03.2011 இரவு 9.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக புகார் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்து 8 மணி நேரம் கழித்து தான் புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்றும், முதல் தகவல் அறிக்கையில் காலதாமதத்திற்கான காரணம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும் கூறியுள்ளார். முதல் தகவல் அறிக்கையில் காலதாமதத்திற்கான காரணம் சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கை நீதித்துறை நடுவர் முன்பு காலதாமதமாகத்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும் கூறியுள்ளார்.

18). அ.சா.5. திரு.அன்பழகன், காவல் ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி ஆவார். இவர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததை பார்வையிட்டு சம்பவ சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்து, புலன்விசாரணைக்கு காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.மகாதேவன் அவர்கள் 11.03.2011 அன்று காலை 7.30 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.த.சா.ஆ.4, வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆகியவைகள் தயார் செய்தும், அன்றையதினமே சாட்சிகளிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், காயம்பட்ட கணேசன் என்பவருக்கு சிகிச்சை அளித்த

மருத்துவரிடம் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் வாங்கியும், புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

19). மேலும் அ.சா.5 திரு.அன்பழகன் தனது குறுக்கு விசாரணையில் இவ்வழக்கின் நேரடியான புலன் விசாரணை அதிகாரி தான் இல்லை என்றால் சரிதான் என்றும், வழக்கு கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கூறியுள்ளார். மேலும் இவ்வழக்கில் நேரடியாக சம்பந்தப்பட்ட சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவருமே மேற்படி சம்பவ சமயம் இரவு நேரம் என்பதாலும், கூட்டமாக வந்ததாலும், யார் தங்களை அடித்தார்கள் என்றும், அடையாளம் காட்ட இயலாது என்றும், தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளவர்களை தங்களுக்கு தெரியாது என்றும் கூறியுள்ளார்கள். அ.சா.3ம் சம்பவம் பற்றி எதுவுமே தெரியாது என்று கூறியுள்ளார். மேலும் அ.சா.4 மற்றும் அ.சா.5 காவல் சாட்சியங்களுக்கு ஆதரவாக எந்தவொரு தனிப்பட்ட சாட்சியும் சம்பவம் நடந்தது பற்றி சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பிரதான போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்பதால் தனிநபர் சாட்சிகள் யாரும் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் முதல் தகவல் அறிக்கையும் 8 மணி நேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்குமா என்று சந்தேகம் எழுகிறது. மேலும் இவ்வழக்கில் ஈடுபட்ட எதிரிகள் சம்பந்தமாக நேரடியான சாட்சிகள் எதுவும் இல்லை என்பதாலும், அரசுத்தரப்பிற்கு ஆதரவான காவல்துறை சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிகளை சந்தேகிப்பது இவ்வழக்கிற்கு ஏதுவாக இருக்காது என்பதாலும், இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்குமா என்ற சந்தேகத்தின் அடிப்படையில், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவித்து இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக,** அரசுத்தரப்பு 2, 5 முதல் 8 எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களான இதச பிரிவுகள் 147, 148, 452, 294(பி), 509, 506(ii), 307 உ/இ.149 இதச பிரிவுகளின் கீழும், 5வது எதிரி மீது இதச பிரிவு 342ன் கீழும், 6 முதல் 8 எதிரிகள்

மீது இதச பிரிவு 323ன் கீழும், 2, 5 முதல் 8 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 2, 5 முதல் 8 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1வது எதிரி இறந்துவிட்டார் இவர்மீதான வழக்கு அற்றுபோய்விட்டது.

இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

எதிரிகள் விசாரணை காலத்தில் எழுதி கொடுத்திருந்த ஜாமின் பத்திரத்தை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. அதன் விளைவாக ஜாமின்தாரர்கள் விடுவிப்பு செய்து உத்தரவிடப்படுகிறது.

கு.வி.மு.ச பிரிவு 437 - A தேவைக்கேற்ப புதிய ஜாமின் பத்திரத்தை ரூ.10,000/-க்கு நிறைவேற்றுமாறு குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

கு.வி.மு.ச. பிரிவு 437 - Aன் படி குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளிடம் இருந்த தனிப்பட்ட பத்திரத்தை (Personal bond) பெறுமாறு இந்த நீதிமன்ற அலுவலகத்திற்கு உத்தரவிடப்படுகிறது. அந்த தனிப்பட்ட பத்திரம் (Personal bond) 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் வியாழக்கிழமை அவையறிய தீர்ப்பு பகரப்பட்டது.

A TAMILSELVAN

Digitally signed by A TAMILSELVAN
Date: 2026.03.26 17:39:37 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :-</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. கணேசன் த/பெ. பிரகலாதன் |
| அ.சா.2 | திருமதி. மாரி க/பெ. பிரகலாதன் |
| அ.சா.3 | திரு. முத்தால் த/பெ. துரைசாமி |
| அ.சா.4 | திரு. ரமேஷ் த/பெ. தட்சிணாமூர்த்தி |
| அ.சா.5 | திரு. அன்பழகன் த/பெ. ராஜேந்திரன் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகாரில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.2 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 | பார்வை மகசர் |
| அ.த.சா.ஆ.5 | வரைபடம் |
| அ.த.சா.ஆ.6 | கணேசன் என்பவரின் விபத்து பதிவேட்டு நகல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: -**

இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள்:-**

இல்லை.

A TAMILSELVAN

Digitally signed by A TAMILSELVAN
Date: 2026.03.26 17:39:30 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்.